பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

29 08 2025 FRIDAY 6 45 AM

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, அரசுமுறைப் பயணமாக சற்றுமுன் ஜப்பான் சென்றடைந்தார்.

2. தேசிய தடயவியல் ஆய்வகத்தை அஸ்ஸாம் மாநிலம், குவஹாத்தியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

3. அந்நிய முதலீடுகளை அதிக அளவில் தமிழகம் ஈர்த்து வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அரசுமுறைப் பயணமாக சற்றுமுன் ஜப்பான் சென்றடைந்தார்.

டோக்கியோ விமான நிலையத்தில் அந்நாட்டு அரசு சார்பில் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய வம்சாவளியினரும் ஏராளமாக திரண்டு, தேசியக்கொடியுடன் பிரதமரை வரவேற்றனர்.

(சவுண்ட் பைட் - 15 செகண்ட்ஸ்)

பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்ற வருகின்றன.

இந்தியா – ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

அந்நாட்டு பிரதமர் திரு. Shigeru Ishiba-வுடன் வர்த்தகம், தொழில்நுட்பம், கலாச்சாரம் உட்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தவுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையின் முடிவில், ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது பயணத்தின் இரண்டாவது கட்டமாக, சீனா செல்லும் பிரதமர், இம்மாதம் 31ஆம் தேதி முதல் இரண்டு நாட்கள் Tianjin-ல் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டிலும் கலந்து கொள்கிறார்.

முன்னதாக, பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியா – ஜப்பான் இடையிலான இருதரப்பு உறவில் கடந்த 11 மாதங்களாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார்.

பொருளாதாரம், முதலீடு, செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தவும், இருநாடுகளும் முயற்சி மேற்கொள்ளும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

Tianjin-ல் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின் போது, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், சீன அதிபர் திரு. Xi Jin Ping ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று அஸ்ஸாம் மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

குவஹாத்தியில் தேசிய தடயவியல் ஆய்வக தொடக்க விழாவில் பங்கேற்கவுள்ள திரு. அமித் ஷா, முன்னாள் முதலமைச்சர் Golap Borbora நூற்றாண்டு விழாவிலும் உரையாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அம்மாநில ஆளுநர் மாளிகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தையும் அமைச்சர் திறந்து வைக்கிறார்.

முன்னதாக,நேற்றிரவு நடைபெற்ற பிஜேபி மாநில மையக் குழு கூட்டத்திலும் திரு. அமித் ஷா பங்கேற்றார்.

<<<<<<<>>>>>>>

உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக உள்ளதன் காரணமாக அந்நிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், ஒரு மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முக்கியப் பங்காற்றுவதாக கூறினார்.

கடந்த நான்காண்டுகளில் சென்னை கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனை, மதுரையில் பிரமாண்ட நூலகம், கிளாம்பாக்கத்தில் பேருந்து முனையம் உள்பட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை, அரசு ஊழியர்களாக பணியமர்த்துவோம் என்று தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று தெரிவித்துள்ளார்.

தூய்மைப் பணியாளர்களைப் போலவே, நான்காண்டுகளுக்கு மேல் காத்திருந்த சத்துணவுப் பணியாளர்கள் தற்போது, போராட்டம் நடத்தி வருவதாகவும், அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற முதலமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

வேளாங்கண்ணி பேராலயத்தின் ஆண்டுத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதற்காக, பல்லாயிரக்கணக்கான மக்கள் வேளாங்கண்ணிக்கு வருகை தந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் செல்வன் ஜெபராஜ் 57 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

விளையாட்டுத் துறைக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதன் காரணமாக, சேலம் மாவட்டத்திலிருந்து தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் உருவாகி வருகின்றனர்.

கேலோ இந்தியா போட்டி மூலம் திறமையான வீரர்கள் அடையாளம் காணப்படுவதாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பயிற்சியாளர் திரு. இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் – இளம்பரிதி 45 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

இருவரிச் செய்திகள்

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உட்பட பல்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தி யுக்ரைன் ராணுவ இலக்குகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>>

அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரில் பள்ளி ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 2 குழந்தைகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

<<<<<<<>>>>>>>

டில்லியில் உள்ள ராணுவ மருத்துவமனையில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி லேசர் கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

<<<<<<<>>>>>>>

குடியரசு தலைவர் சென்னை வருவதை முன்னிட்டு வரும் 2, 3 ஆகிய இரு தேதிகளிலும் சென்னையில் ட்ரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

மயிலாடுதுறையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் நேற்று தொடங்கி வைத்தார்

<<<<<<<>>>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் காலியாக உள்ள 77 கிராம உதவியாளர் காலி பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு செப்டம்பர் ஆறாம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

தேனி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் தென்னை மரத்தில் பதநீர் இறக்க அனுமதி வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

<<<<<<<>>>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டையில் கனிம வள நிதியின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சாலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி கரூரில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த 43 விநாயகர் சிலைகள் நேற்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வாங்கல் காவிரி ஆற்றில் கரைக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பிரான்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 19-21, 21-15, 21-17 என்ற செட்கணக்கில் சீனாவின் Liang – Wang இணையை வென்றது.

<<<<<<<>>>>>>>

European கோப்பை பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஸ்லோவேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் குழுப் பிரிவுகளில் 3 தங்கப்பதக்கங்களையும், 4 வெள்ளிப் பதக்கங்களையும் வென்றது.

ஆடவர் பிரிவிலும் ராகேஷும், மகளிர் பிரிவில் ஷீத்தலும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

<<<<<<<>>>>>>>

காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Ajaya Babu தங்கப்பதக்கம் வென்றார்.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 81 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<<>>>>>>>

டைமண்ட் லீக் தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் 85 புள்ளி பூஜ்யம் ஒன்று மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<<>>>>>>>

ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டி பீகார் மாநிலம், ராஜ்கீரில் இன்று தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>>